**மாத்தளை மாநகர சபையி - 2024**

------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளை மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய பதிவுகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தளை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் 09 கட்டிடங்களின் புனரமைப்பிற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 10,844,111 மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கைத் தயாரிக்கும் போது திருத்தம் செய்யப்படுமென. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 'கழிவுத் தொகுதியில் ரூபா.147,662 பெறுமதியான சேதன பசளைகளின் இருப்பும் ரூபா 362,786 பெறுமதியான ஆயுர்வேத மருந்துகளின் இருப்பும் கணக்கீடு செய்யப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கைத் தயாரிக்கும் போது திருத்தம் செய்யப்படுமென. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் , இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 06 விடயங்களுக்குரிய மீதிகள் உப அட்டவணைகளுடன் | 2025 இன் ஆண்டிற்கான இறுதிக் கணக்கைத் தயாரிக்கும் போது | கணக்கு மீதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒப்பிடும் போது மொத்தம் ரூபா 25,789,133 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | திருத்தம் செய்யப்படுமென. | |

### 1.6.3 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வவாண்டின் இறுதியில் ரூபா . 101,837,112 பெறுமதியான 08 கணக்கு விடயங்களின் மீதிகள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் உப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | எதிர்காலத்தில் இம் மீதிகள் சரி செய்யப்படும். | ஒவ்வொரு மீதியையும் சரிபார்க்க கோவைகள் மற்றும் ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| **1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு** | வீதவரி ஆதனங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பிடப்பட்டு வரி விதிக்கப்பட வேண்டும் என்றாலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் தேவையான எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும். | 5 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டு அதற்கேற்ப மதிப்பீடுகள் விதிக்கப்பட வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| நி.பி 571(3) | 2017 - 2022 காலகட்டத்துடன் தொடர்புடைய காலாவதியான ரூபா. 1,198,261 பெறுமதி யான 10 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் தீர்க்கப்படும் என்பதாக | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) ஏனைய சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் ஆந் திகதிய 2016/3/2 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | பல்பொருள் அங்காடியில் உள்ள 146 கடைகளின் 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டு 11 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் புதிய மதிப்பீடு மேற்கொள்ளப் படவில்லை. | புதிய மதிப்பீடு கிடைத்தவுடன் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக | புதிய மதிப்பீடு பெறப்பட்டு வாடகை வசூலிக்கப்பட வேண்டும். |
| (ii) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை. | நகர அபீவிருத்தி அதிகாரசபையின் பெயரில் பேணப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட திட்டங் களுக்கு ரூபா 3,237,659 ஆன நிதியைப் நகர அபீவிருத்தி அதிகாரசபையிடம் கோரி அபிவிருத்தி நடவடிக்கை களுக்கு பயன் டுத்தப் பட்டிருக்கவில்லை. | 2025-05-09 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவக் குழுத் தீர்மானத்தின் கீழ் இது தொடர்பான மேலும் பணிகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதாக | நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதியம் பிராந்திய அபிவிருத்திக் குப் பயன படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,329,320 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 111,343,407 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மாநகர சபை ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

| | வருமான மூலம் | 2024 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 48,556,000 | 48,745,554 | 43,441,381 | 45,618,563 | 41,643,000 | 47,077,927 | 50,895,229 | 40,314,390 |
| (ii) | வாடகை | 37,831,487 | 38,794,172 | 37,288,099 | 16,568,748 | 30,214,000 | 34,781,588 | 35,418,548 | 15,062,675 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 17,731,600 | 20,336,672 | 20,525,072 | 566,600 | 16,403,000 | 14,765,290 | 14,990,930 | 755,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 128,216,400 | 154,516,670 | 145,993,491 | 130,210,528 | 128,784,000 | 157,054,138 | 76,686,233 | 121,687,349 |
| | | **232,335,487** | 262,393,068 | 247,248,043 | 192,964,439 | 217,044,000 | 253,678,943 | 177,990,940 | 177,819,414 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ).** | **வீதவரி** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 45,607,785 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்டது. ஒவ்வொரு அலகிலிருந்தும் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 46 ஆதனங்களில் ரூபா 17,259,098 ஆன நிலுவை மீதியொன்று மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252(1) (அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்காக வருமான பிரிவு ஆதன உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானம அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | பல்பொருள் அங்காடியில் உள்ள இரண்டு கடைகள் 18 ஒக்டோபர் 2019 ஆந் திகதி சீல் வைக்கப்பட்டன, ஆனால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் மொத்தம் ரூபா 1,189,927 கடை வாடகை நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்க (வழக்குகள் தாக்கல் செய்ய). அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | நிலுவை வருமானம அறவிடப்பட வேண்டும். |
| (ii) | பல்பொருள் அங்காடியில் உள்ள கடைகளில் சாவி பணத்தை (key money) செலுத்த வேண்டிய திகதியிலிருந்து 1 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், சாவி பணம் மற்றும் மத்திய வங்கி வட்டி விகிதம் பிரகாரம் கணக்கிடப்பட்ட மிகைக் கட்டணம் உட்பட மற்றும் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வரிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மொத்தம் ரூபா. 10,035,264 தொகை மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் வசூலிக்கப்பட்டிருக்க வில்லை. | அது எதிர்காலத்தில் வசூலிக்கப்படும். | அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட மிகை கட்டணம் மற்றும் வரிகள் உட்பட நிலுவையில் உள்ள வருமானங்கள அறவிடப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிய இல் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானத் தொகை ரூபா 4,745,428 ஆக இருந்தது, இதில் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வாடகை வருமானமாக ரூபா. 931,961 ஆகவும் 02 முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட | நிலுவை குத்தகைப் பணத்தை செலுத்தாத வர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை வருமானமான ரூபா 2,310,746 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய் வாண்டின் திசெம்பர் 31 திகதியில் நீதிமன்ற தண்டப் பணமாக ரூபா 731,462 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 112,941,480 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | பணத்தை அறிவிடுவதற்காக பிரதான செயலகத்திற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 2.3 மிகை அறவீடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளில் ரூபா 2,373,614 ஆன 03 மிகை விதிப்புக்கள் விதிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளில் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 2,355,761 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை மிகை விதிப்புக்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை மிகை விதிப்புக்களை அறவிடப்பட வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 5,834,932 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,084,486 தொகை 1 ஆண்டிற்கும் 5 இற்கும் இடைப்பட்டிருந்ததுடன் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 2,770,390 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக விரைவில் நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நானாவித கடன்கொடுத்தோர் மீதி ரூபா | கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு விரைவில் | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | 98,018,348 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கும் 5 இற்கும் இடைப்பட்ட மீதி ரூபா 6,246,345 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 71,083,509 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதாக. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) பிரிவு 254 (அ) (i) பந்தியின் பிரகாரம், மாத்தளை மாநகர சபைக்குச் சொந்தமான வாடி வீட்டு நிர்வாகக் கட்டணம் ரூபா. 11,540,577 தொகை சுமார் 05 வருட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த தொகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானத்தை அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | பல்பொருள் அங்காடியில் உள்ள நான்கு கடைகள் சீல் வைக்கப்பட்டு 1 முதல் 2 ஆண்டுகள் வரை கடந்திருந்த போதிலும், தொடர்புடைய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி நிலுவை வாடகையை அறவிட்டு மீண்டும் கேள்வி கோராமை காரணமாக ˙, மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை ரூபா 341,115 ஆன வருமானம் சபை நிதியத்திற்கு கிடைக்காமல் போயுதுள்ளது. | சட்ட ரீதியாக எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானத்தை அறவிட்டு மீண்டும் கேள்வி கோரப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்பொருள் அங்காடி தொகுதியில் உள்ள 31 கடைகள் குத்தகையாளர்களால் வாடகைக்கு எடுக்கப்பட்டு வாடகையை செலுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தன. | மாத்தளை பொதுச் சந்தை தொடர்பான உப உறுப்புரையின் 30 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக. | கடைகளை திறம்பட பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பிரகாரம் மொத்தம் ரூபா. 7,143,750 பெறுமமதியான 07 வாகனங்கள் 1 முதல் 6 ஆண்டுகள் வரை செயலற்ற நிலையில் இருந்தன. | அவற்றை ஏலத்தில் விற்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | அவற்றைப் பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் செயற்பாடுகள் அல்லது மூலதன வேலை தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மாநகர நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபா 18,342,842 பெறுமதியான 14 அபிவிருத்தி வேலைகளை மேற் கொள்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 8,871,471 பெறுமதியான 06 நிர்மாணங் களுக்கான பணிகள் தொடங்கப்படா திருந்ததுடன், மேலும் ரூபா. 9,471,371 பெறுமதியான 08 நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 85 சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளை உடனடியாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பதாக. | அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை விரைவில் ஆரம்பித்து வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, அவற்றின் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 32 பதவிகளில் 108 வெற்றிடங்களும் 02 பதவியில் 08 மிகைகளும் காணப்பட்டன. | தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை பயன்படுத்தும் ரூபா 2,500,000 பெறுமதியான மோட்டார் காரின் உரிமை கையேற்கப்பட்டிருக்க வில்லை. | இயந்திர பொறியியலாளர் உட்பட குழுவின் இறுதி பரிந்துரைகள் மற்றும் கட்டளைகள் கிடைக்கும் வரை உள்ளதாக . | உரித்து கையேற்கப்படுத்த வேண்டும். |